## மத்திய அரசின் 'ஒலிபரப்பு சேவைகள் ஒழுங்குமுறை மசோதா 2023' வரைவு அறிமுகம்




**புதுடெல்லி:** 'ஒலிபரப்பு சேவைகள் (ஒழுங்குமுறை) மசோதா 2023' வரைவு குறித்து மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம் கருத்துகளைக் கோரியுள்ளது. இந்தத் துறையின் வல்லுநர்கள், ஒலிபரப்பு சேவை வழங்குநர்கள் மற்றும் பொதுமக்கள் 30 நாட்களுக்குள் கருத்துகளை அனுப்பலாம் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இது குறித்து மத்திய அரசு வெளியிட்ட தகவல்: 'கேபிள் நெட்வொர்க்குகள் (ஒழுங்குமுறை) சட்டம் 1995' என்பது 30 ஆண்டுகளாக நடைமுறையில் உள்ளது. இது கேபிள் நெட்வொர்க்குகள் உட்பட நேரியல் ஒளிபரப்பில் உள்ளடக்கத்தைக் கண்காணிக்கும் முதன்மைச் சட்டமாக செயல்படுகிறது. இருப்பினும், இடைப்பட்ட காலத்தில் ஒலிபரப்புத் துறையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. தொழில்நுட்ப முன்னேற்றங்கள் டி.டி.எச், ஐபிடிவி, ஓடிடி மற்றும் பல்வேறு ஒருங்கிணைந்த புதிய தளங்களை அறிமுகப்படுத்தியுள்ளன.

ஒலிபரப்புத் துறை, குறிப்பாக கேபிள் டி.வி. டிஜிட்டல் மயமாக்கப்படுவதால், கட்டமைப்பை ஒழுங்குபடுத்த வேண்டிய அவசியம் அதிகரித்து வருகிறது. இது வணிகம் செய்வதை எளிதாக்குவதை உறுதிப்படுத்த வகை செய்கிறது. மிகவும்

ஒருங்கிணைந்த அணுகுமுறையின் அவசியத்தை உணர்ந்து, தற்போதுள்ள கட்டமைப்புக்கு பதிலாக ஒரு புதிய, விரிவான சட்டம் தேவைப்படுகிறது.

மத்திய அரசின் தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம், 'ஒலிபரப்பு சேவைகள் (ஒழுங்குமுறை) வரைவு மசோதா, 2023'-ஐ முன்மொழிந்துள்ளது. இந்த வரைவு மசோதா நாட்டில் ஒலிபரப்பு சேவைகளை ஒழுங்குபடுத்த ஒரு ஒருங்கிணைந்த கட்டமைப்பை வழங்கும். மேலும், நாட்டில் தற்போது ஒலிபரப்புத் துறையை நிர்வகிக்கும் கேபிள் தொலைக்காட்சி நெட்வொர்க்குகள் (ஒழுங்குமுறை) சட்டம், 1995 மற்றும் பிற கொள்கை வழிகாட்டுதல்களை மாற்ற முயற்சிக்கிறது.

இந்த மசோதா ஓவர்-தி-டாப் (ஓடிடி) உள்ளடக்கம் மற்றும் டிஜிட்டல் செய்திகளை உள்ளடக்குவதற்கு அதன் வரம்பை விரிவுபடுத்துகிறது. மேலும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களுக்கான சமகால வரையறைகள் மற்றும் விதிகளை அறிமுகப்படுத்துகிறது. இதில் சட்டரீதியான அபராதங்கள் போன்றவற்றை விதிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

இந்த மசோதா ஆறு அத்தியாயங்கள், 48 பிரிவுகள் மற்றும் மூன்று அட்டவணைகளைக் கொண்டுள்ளது. ஒலிபரப்பு சேவைகள் (ஒழுங்குமுறை) மசோதா, 2023 மூலம் நாட்டில் வெளிப்படைத்தன்மை, சுய ஒழுங்குமுறை மற்றும் எதிர்காலத்திற்கு தயாராக உள்ள ஒலிபரப்பு சேவைகளின் புதிய சகாப்தத்தை ஏற்படுத்தத் தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம் உறுதிபூண்டுள்ளது.

இந்தத் துறையின் வல்லுநர்கள், ஒலிபரப்பு சேவை வழங்குநர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட பரந்த அளவிலான பங்குதாரர்களிடமிருந்து மேற்கண்ட மசோதா குறித்த கருத்துகளையும், ஆலோசனைகளையும் அமைச்சகம் வரவேற்கிறது. இந்தச் செய்திக்குறிப்பு வெளியான நாளிலிருந்து 30 நாட்களுக்குள் jsb-moib@gov.in என்ற மின்னஞ்சலுக்கு கருத்துகளை அனுப்பலாம் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

## சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் நவ.21 முதல் தேசிய பில்லியர்ட்ஸ் போட்டி



**சென்னை:** சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் வரும் 21-ம் தேதி தேசிய பில்லியர்ட்ஸ் போட்டி தொடங்குகிறது.

தமிழ்நாடு பில்லியர்ட்ஸ் மற்றும் ஸ்னூக்கர் சங்கம் (டிஎன்பிஎஸ்ஏ) சார்பில் 90-வது தேசிய பில்லியர்ட்ஸ் மற்றும் ஸ்னூக்கர் சாம்பியன்ஷிப் போட்டி சென்னையில் உள்ள நேரு உள்விளையாட்டு அரங்கில் வரும் 21-ம் தேதி முதல் டிசம்பர் 25-ம் தேதி வரை நடைபெறவுள்ளது. இந்த போட்டியில் நாடு முழுவதிலும் இருந்து 1500 வீரர்கள் பங்கேற்கின்றனர்.

ஆடவர், மகளிருக்கான சீனியர் பில்லியர்ட்ஸ் மற்றும் ஸ்னூக்கர், மாஸ்டர்ஸ் ஸ்னூக்கர், ஆடவர், மகளிருக்கான 6 ரெட்ஸ் ஸ்னூக்கர், சிறுவர் மற்றும் சிறுமிகளுக்கான சப்-ஜூனியர் மற்றும் ஜூனியர் பில்லியர்ட்ஸ், ஸ்னூக்கர் போட்டிகள் நடைபெற உள்ளது. உலக சாம்பியனான பங்கஜ் அத்வானி, ஆதித்யா மேத்தா, ரஃபத் ஹபீப், வித்யா பிள்ளை, பிரிஜேஷ் தமானி, கிருஷ்ண சூர்யநாராயணன் மற்றும் அனுபமா ராமச்சந்திரன் ஆகியோர் இந்த தொடரில் பங்கேற்க உள்ளனர். 2011-ம் ஆண்டுக்குப் பிறகு தேசிய பில்லியர்ட்ஸ் போட்டி தமிழகத்தில் நடைபெறுகிறது.

இத்தகவலை தமிழ்நாடு பில்லியர்ட்ஸ் சங்க தலைவர் பி.ஜி.முரளிதரன் தெரிவித்தார். செயலாளர் என்.கணேஷ், இணைச் செயலர் கே.நடராஜ், துணைத் தலைவர்கள் ராஜ் மோகன், ஹரிஹரன் ராஜாமணி, பொருளாளர் இ.சிவக்குமார் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

## ஆசிய சாம்பியன்ஷிப் வில்வித்தை | தங்கம் வென்றார் பிரனீத் கவுர்

**பாங்காக்:** ஆசிய சாம்பியன்ஷிப் வில்வித்தை போட்டியில் இந்திய வீராங்கனையான பிரனீத் கவுர் தங்கப் பதக்கம் வென்றார்.

தாய்லாந்தின் பாங்காக் நகரில் நடைபெற்ற இந்த தொடரில் மகளிருக்கான காம்பவுண்ட் தனிநபர் பிரிவு இறுதிப் போட்டியில் இந்திய வீராங்கனையான பிரனீத் கவுர், சகநாட்டைச் சேர்ந்த ஜோதி சுரேகாவை எதிர்த்து விளையாடினார். இதில் ஒரு கட்டத்தில் பிரனீத் கவுர் 2 புள்ளிகள் பின்தங்கியிருந்தார். இதன் பின்னர் கடைசி 2 சுற்றில் மீண்டு வந்த அவர், போட்டியை 145-145 என்ற கணக்கில் சமநிலைக்கு கொண்டு வந்தார்.

இதையடுத்து வெற்றியை தீர்மானிக்க ஷூட்-ஆஃப் முறை கடைபிடிக்கப்பட்டது. இதில் பிரனீத் கவுர் 9-8 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றி பெற்று தங்கப் பதக்கம்வென்றார். சர்வதேச அளவில் பிரனீத் கவுர் வென்ற முதல் தங்கப்பதக்கம் இதுவாக அமைந்தது. 2-வது இடம் பிடித்த ஜோதி சுரேகாவெள்ளிப் பதக்கம் பெற்றார்.

காம்பவுண்ட் கலப்பு அணிகள் பிரிவில் இந்தியாவின் அதிதி சுவாமி, பிரியன்ஷ் ஜோடி 156-151 என்ற புள்ளிகள் கணக்கில் தாய்லாந்து ஜோடியை வீழ்த்தி தங்கப் பதக்கம் வென்றது. மகளிருக்கான காம்பவுண்ட் அணிகள் பிரிவில் ஜோதி சுரேகா, பிரனீத் கவுர், அதிதி சுவாமி ஆகியோரை உள்ளடக்கிய இந்திய அணி இறுதிப் போட்டியில்

EVA STALIN IAS ACADEMY

234-233 என்ற புள்ளிகள் கணக்கில் சீன தைபே அணியை தோற்கடித்து தங்கப் பதக்கம் வென்றது.

ஆடவருக்கான காம்பவுண்ட் தனிநபர் பிரிவில் இந்தியாவின் அபிஷேக் வர்மா 147-146 என்ற புள்ளிகள் கணக்கில் தென் கொரியாவின் ஜூ ஜாஹூனை தோற்கடித்து வெண்கலப் பதக்கம் கைப்பற்றினார். ரீகர்வ் பிரிவில் இந்திய வீரர், வீராங்கனைகளில் ஒருவர் கூட கால் இறுதி சுற்றை கடக்கவில்லை. ஆடவர் பிரிவில் தீரஜ் பொம்மதேவரா 3-7 என்ற கணக்கில் சீன தைபேவின் டாங் சி-சுனிடம் தோல்வி அடைந்தார்.

தருன்தீப் ராய் 0-6 என்ற கணக்கில் தென் கொரியாவின் கிம் ஜே டியோக்கிடம் வீழ்ந்தார். ரீகர்வ் மகளிர் பிரிவில் பஜன் கவுர் 0-6 என்ற கணக்கில் முதல் நிலை வீராங்கனையான தென் கொரியாவின் லிம் சியோனிடம் தோல்வி அடைந்தார். திஷா புனியா1-7 என்ற கணக்கில் சீனாவின் ஹாய் லிகனிடம் வீழ்ந்தார்.

## ஒரு லட்சம் இந்திய தொழிலாளர்களை பணியமர்த்த தைவான் அரசு திட்டம்



**புதுடெல்லி:** கிழக்கு ஆசிய நாடான தைவானை ஆக்கிரமிக்க சீனா தொடர்ந்து முயற்சி செய்து வருகிறது. இதன் காரணமாக ராணுவ, வர்த்தக ரீதியாக அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட நாடுகளுடன் தைவான் நட்பு பாராட்டி வருகிறது.

தைவானில் உற்பத்தித் துறை, வேளாண்மை, மீன் பிடித் துறையில் தொழிலாளர்களுக்கு கடுமையான பற்றாக்குறை நிலவுகிறது. இதற்கு தீர்வு காண இந்தியாவில் இருந்து ஒரு லட்சம் தொழிலாளர்களை பணியமர்த்த அந்த

நாட்டு அரசு திட்டமிட்டுள்ளது. இதுதொடர்பாக இந்தியா, தைவான் இடையே பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது. இந்திய தொழிலாளர்களை அனுப்பி வைப்பது தொடர்பாக இரு நாடுகளிடையே வரும் டிசம்பருக்குள் ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜப்பான், பிரான்ஸ், பிரிட்டன் உள்ளிட்ட 13 நாடுகளுடன் இந்தியா சார்பில் தொழிலாளர் பரிமாற்ற ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. இந்த பட்டியலில் தைவானும் விரைவில் இணைய உள்ளது.

இஸ்ரேல் ராணுவம், ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு இடையே போர் நடைபெற்று வருவதால் இஸ்ரேலில் பணியாற்றிய வெளிநாட்டினர் சொந்த நாடுகளுக்கு திரும்பிவிட்டனர். இதன் காரணமாக இஸ்ரேலில் தொழிலாளர்களுக்கு கடுமையான பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது.

எனவே சுமார் ஒரு லட்சம் இந்திய தொழிலாளர்களை பணியமர்த்த இஸ்ரேல் அரசு திட்டமிட்டுள்ளது. இதுதொடர்பாக இந்தியா, இஸ்ரேல் அரசுகளிடையே பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது

## தொழிற்சாலைகளில் பணியாற்றும் பெண் ஊழியர் எண்ணிக்கையில் தமிழ்நாடு முதலிடம்

**புதுடெல்லி:** இந்தியாவில் தொழிற்சாலைகளில் பெண் ஊழியர்களை அதிகம் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.

மத்திய தொழிலாளர் அமைச்சகம் வெளியிட்ட 2019-20-ம் ஆண்டுக்கான தொழிற்துறை புள்ளிவிவரங்களின்படி, இந்திய அளவில் தொழிற்சாலைகளில் 15.80 லட்சம் பெண்கள் வேலை செய்கின்றனர். இவர்களில் 6.79 லட்சம் பேர் தமிழ்நாட்டில் உள்ள தொழிற்சாலைகளில் வேலை செய்கின்றனர்.

இது இந்திய அளவில் தொழிற்சாலைகளில் பணிபுரியும் மொத்த பெண் ஊழியர்களின் எண்ணிக்கையில் 43 சதவீதம் ஆகும். அதேபோல், சிறு, குறு, நடுத்தர நிறுவனங்களை சொந்தமாக நடத்தும் பெண்களின் எண்ணிக்கையில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது.

சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற, தொழிற்துறை விருதுவழங்கும் விழாவில் பங்கேற்ற தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் பழனிவேல்தியாகராஜன் பேசுகையில், “இந்தியாவில் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் பெண்களில் 10-ல் 4 பேர் தமிழ்நாட்டில் உள்ளநிறுவனங்களில் வேலை செய்பவர்கள். தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பில் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. பெண்களின் மேம்பாட்டுக்காக தமிழ்நாடு அரசு பல்வேறு முன்னெடுப்புகளை வழங்கி வருகிறது.

அரசு துறையில் வேலை செய்யும் பெண்களுக்கான பேறுகால விடுப்பு 1 ஆண்டாக நீட்டிக்கப்பட்டுள்ளது. அதேபோல், அரசுப் பேருந்துகளில் பெண்களுக்கு கட்டணமில்லாமல் பயணம் செய்யும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. முன்னேற்றப் பாதையில் பயணிக்க வேண்டுமென்றால், பெண்களுக்கு கூடுதல் முக்கியத்துவம் வழங்க வேண்டும்” என்று தெரிவித்தார். இந்தியாவில் அதிக தொழிற்சாலைகளைக் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. தமிழ்நாட்டில் 38,837 தொழிற்சாலைகள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## ‘டிஜிட்டல் விளம்பரக் கொள்கை 2023’-க்கு மத்திய அமைச்சகம் ஒப்புதல்



**புதுடெல்லி:** ‘டிஜிட்டல் விளம்பரக் கொள்கை 2023’-க்கு மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது. இது குறித்த மத்திய அரசின் செய்திக் குறிப்பு: சிபிசி (CBC) எனப்படும் மத்திய

மக்கள் தொடர்பகத் துறைக்கு டிஜிட்டல் மீடியா பிரச்சாரங்களை மேற்கொள்ள ஏதுவாக 'டிஜிட்டல் விளம்பரக் கொள்கை 2023-க்கு தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது. டிஜிட்டல்மயமாக்கலுக்கு ஏற்ப மத்திய அரசின் பல்வேறு திட்டங்கள் மற்றும் கொள்கைகள் குறித்து தகவல்களைப் பரப்புவதற்கும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் 'சிபிசி'-யின் பணியில் இந்தக் கொள்கை ஒரு முக்கிய தருணத்தைக் குறிக்கிறது.

சமீபத்திய ஆண்டுகளில், பார்வையாளர்கள் ஊடகங்களைப் பயன்படுத்தும் விதம் டிஜிட்டல் இடத்தை நோக்கிய மாற்றத்தைக் கண்டுள்ளது. மத்திய அரசின் டிஜிட்டல் இந்தியா திட்டம் நாட்டில் இப்போது இணையம், சமூக மற்றும் டிஜிட்டல் ஊடக தளங்களுடன் இணைக்கப்பட்டு மிகப் பெரிய வளர்ச்சிக்கு வழிவகுத்துள்ளது. மார்ச் 2023 நிலவரப்படி தொலைத்தொடர்பு சந்தாதாரர்களின் எண்ணிக்கை 1172 மில்லியனுக்கும் அதிகமாக உள்ளது.

ஓடிடி மற்றும் வீடியோ ஆன் டிமாண்ட் ஸ்பேஸில் ஏஜென்சிகள் மற்றும் அமைப்புகளை இணைக்க சிபிசி-க்கு இந்த கொள்கை உதவும். சிபிசி இப்போது முதல் முறையாக அதன் பொது சேவை பிரச்சார செய்திகளை மொபைல் பயன்பாடுகள் மூலமும் வழிநடத்த முடியும். சமூக ஊடகத் தளங்கள் பொது உரையாடல்களின் பிரபலமான சேனல்களில் ஒன்றாக மாறியுள்ள நிலையில், இந்தத் தளங்களில் அரசு வாடிக்கையாளர்களுக்கு சிபிசி விளம்பரங்களை வைக்கும் செயல்முறையை இந்தக் கொள்கை மேலும் ஒழுங்குபடுத்துகிறது. பல்வேறு தளங்கள் மூலம் அதன் பரவலை மேம்படுத்த டிஜிட்டல் மீடியா ஏஜென்சிகளை ஒருங்கிணைக்க சிபிசிக்கு இந்தக் கொள்கை அதிகாரம் அளிக்கிறது.

இந்தக் கொள்கை டிஜிட்டல் தளத்தின் மாறும் தன்மையை அங்கீகரித்து, முறையாக அமைக்கப்பட்ட குழுவின் ஒப்புதலுடன் டிஜிட்டல் இடத்தில் புதிய மற்றும் புதுமையான தகவல்தொடர்பு

தளங்களை இணைக்க சிபிசிக்கு அதிகாரம் அளிக்கிறது. சிபிசியின் டிஜிட்டல் விளம்பரக் கொள்கை - 2023, கண்டுபிடிப்புக்கான போட்டி ஏலத்தை அறிமுகப்படுத்துகிறது, வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறனை உறுதி செய்கிறது. இந்த செயல்முறையின் மூலம் கண்டறியப்படும் கட்டணங்கள் மூன்று ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும் மற்றும் அனைத்து தகுதியான நிறுவனங்களுக்கும் பொருந்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

EVA STALIN IAS ACADEMY